பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்பி

மலர் : 15] சென்னை : பங்குனி 30 (12—4—68) வெள்ளி ★ வெளியூர் : சித்திரை 1 (13—4—68) சனி [இதழ் : 251

அரசியல்வாதிகளை உருவாக்கக் கல்லூரி

"சிறந்த அரசியல்வாதிகளை உருவாக்குவதற்குப் பஞ்சாபில் விரைவில் ஒரு கல்லூரி ஏற்படுத்தும் யோசனை அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது"

என்று தெரிவித்த பஞ்சாப் நிதியமைச்சர், மேலும் கூறியதாவது:-

"பொது நிர்வாகத்திலும், அரசியல் பிரச்சினைகளிலும் போதிய அறிவு இல்லாததே, பொது வாழ்க்கையில் இப்போது காணப்படும் சீரழிவுக்குப் பெரும்பாலும் காரணமாகும்."

அரசியல் சட்டத்திலும் தமிழ்நாடு!

பெயரை மாற்ற நாடாளுமன்றத்தில் மசோதா

காங்கிரசாரின் முட்டுக்கட்டை உடைபட்டது

போதிய ஆதரவுடன் அவையின் அனுமதி

புதுடில்லி, ஏப். 11—

'சென்னை இராஜ்யம்' என்று அரசியல் சட்டத்தில் இருப்பதை, 'தமிழ்நாடு' என்று திருத்தக் கோரும் தனியார் மசோதா ஒன்றினை நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் கொண்டுவந்தார்.

இந்த மசோதாவுக்கு எதிராக ஒரு சில காங்கிரசுக்காரர்கள் காட்டிய சலசலப்பும், பிறகு பிசுபிசுத்தது.

அரசுத் தரப்பில் இத்தகைய மசோதா ஒன்று கொண்டு வரப்படுமானால், தமது மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாக திரு. செழியன் அறிவித்தார்.

இம்மசோதாவை திரு. செழியன் முன்மொழிந்தபோது அதற்குக் காங்கிரசு உறுப்பினரான திரு. போலா நாத் மாஸ்டர் என்பவர் எதிர்ப்புத் தெரிவித்தார்; 'நீண்ட ஆலோசனைக்குப் பிறகுதான், எல்லா மாநிலங்களின் பெயர்களும் மக்களால் முடிவு செய்யப்பட்டன; அப்படி சென்னை இராஜ்யத்தின் பெயரை மாற்றுவதாக இருந்தால், இராஜஸ்தானின் பெயரை 'ஆரவல்லி பிரதேஷ்' என மாற்றக் கோரி இராஜஸ்தான் சட்டமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது' என றெல்லாம் அவர் கூறினர்; 'இராஜஸ்தான் பெயர் மாறறத்தையும் இத்துடன் சேர்த்து நிறைவேற்ற வேண்டும்' என்றார்.

"பூகோள—வரலாற்று அடிப்படையில் மாநிலங்களுக்குப் பொருத்தமான பெயர்களைச் சூட்டுவது குறித்து ஒரு குழு அமைக்க வேண்டும்" என்றும் அவர் கோரினர்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் திரு. இரா. செழியன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"இராஜஸ்தான் சட்டமன்றக் கோரிக்கையை நானும் ஆதரிக்கிறேன்.

"'தமிழ்நாடு' என்பது, வரலாற்று அடிப்படையிலான பெயர்தான்; பண்டைத் தமிழ் இலக்கியங்களிலெல்லாம தமிழ்நாடு என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது.

"தமிழகத்தில் அமைந்துள்ள மக்களாட்சி, தமிழ்நாடு எனப் பெயரிட விரும்புகிறது. 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பது, ஆங்கிலேயரால் இடப்பட்ட பெயராகும்.

"தமிழகச் சட்டமன்றத்தில், 'தமிழ்நாடு' எனப் பெயர் மாற்றம் கோரி ஒருமனதாகத் திர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், இப்போது தமிழக அரசின் தமிழ்ப் பதிவேடுகள் அனைத்திலும் 'தமிழ்நாடு' என்றே குறிப்பிடப்படுகிறது; வழக்கிலும், 'தமிழ்நாடு' என்ற பெயரே வழங்குகிறது.

"எனவே, 'தமிழ்நாடு' என்று அரசியல் சட்டத்திலும் மாற்றுவதற்குரிய மசோதாவைச் சிறிதும் காலந்தாழ்த்தாது அரசே கொண்டுவருமானால் நான் என்னுடைய மசோதாவைத் திரும்பப் பெற்றுக் கொள்ளத் தயாராயிருக்கிறேன்."

திரு. செழியன் தமது மசோதாவை முன்மொழிந்த நேரத்தில் இரண்டாவது தடங்கலாச, சிவநாராயணன் என்னும் காங்கிரசு உறுப்பினர் எழுந்து ஒரு பிரச்சினையைக் கிளப்பினர்; அவையில் போதிய உறுப்பினர்கள் (கோரம்) இல்லை என்பதே எதிர்ப்புக்குக் காரணம்; ஆனல் சிறிது நேரத்துக்கெல்லாம் அவையில் போதுமான உறுப்பினர்கள் வந்து சேர்ந்து விட்டனர்.

மசோதாவை முன்மொழிய திரு. செழியனுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

மசோதா முன்மொழியப்பட்ட நேரத்தில் அனுமதி தருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இரண்டொரு ஈனக்குரல்கள் சேட்டன; அவற்றைப் பொருட்படுத்தவில்லை.

ரூ. 30 இலட்சம் மதிப்புள்ள கடத்தல் பொருள்கள்

பம்பாயில் கைப்பற்றப்பட்டன

பம்பாய, ஏப் 12—

நேற்று காலையில் இங்கு நடத்திய சோதனை ஒன்றில் ரூ. 30 இலட்சம் பெறுமானமுள்ள கடத்தல் பொருள்கள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

கொலாபாவுக்கு அருகிலுள்ள கடற்கரையில் நடத்திய சோதனையில் 11,500 தோலா அந்நியத் தங்கமும், 5,500 கைக் கடிகாரங்களும் கைப்பற்றப்பட்டன.

அறிவிப்பு

நாளை நமது அலுவலகத்திற்கு விடுமுறையாகையால் 'நம் நாடு' அடுத்த இதழ் 15-4-68 அன்று சென்னையிலும், அடுத்த நாள் வெளியூர்களிலும் கிடைக்கும்.

—பொறுப்பாளர்

ஏப்ரல் 15-ம் நாள் பள்ளிகள் திறப்பு

ஒரு வாரத்திற்குப் பின் தேர்வுகள் நடக்கும்

சென்னை, ஏப். 12—

"எல்லாப் பள்ளிகளும் ஏப்ரல் 15-ஆம் நாள் மீண்டும் திறக்கப்படும்; சில நாட்களுக்குப் பிறகு ஆண்டுத் தேர்வுகள் ஆரம்பமாகும்"

என்று அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது.

"பல ஆசிரியர்கள் எஸ். எஸ். எல். சி. விடைத் தாள்களைத் திருத்துவதில் ஈடுபட்டுள்ளதால், பள்ளிகள் ஏப். 20-ம் நாள்வரை மூடப்பட்டிருக்கும்" என்று கூறப்படுவதை ஓர் அதிகாரி மறுத்தார்.

"பள்ளிகள் திறக்கப்பட்டவுடன் ஆண்டுத் தேர்வுகளை நடத்தக் கூடாது; குறைந்தது ஒரு வாரத்துக்குப் பிறகுதான் தேர்வுகளை நடத்தவேண்டும்" என்று உயர்தரக் கல்வித் துறை, பள்ளிகளுக்குத் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

காங்கிரசுத் தலைமைப் பதவிக்கு நிஜலிங்கப்பா முழுக்கு?

முதலமைச்சர் பதவியிலேயே நீடிக்கப் போகிருராம்

புதுடில்லி, ஏப். 11—

அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர் பதவியைவிட்டு விரைவிலேயே திரு. நிஜலிங்கப்பா வெளியேறுவார் என்று நம்பகமாகத் தெரிகிறது.

கருநாடக மாநிலத் தலைமையமைச்சர் பதவியிலிருந்து கொண்டே காங்கிரசுத் தலைமைப் பதவியிலும் நீடிக்கத் திட்டமிட்டிருந்த அவர், அதற்குரிய சூழ்நிலை இல்லாத காரணத்தால், இப்போது ஒரு பதவியை உதறித் தள்ளுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்.

தமக்கு மிகவும் பிடித்தமான முதலமைச்சர் பதவியிலேயே தொடர்ந்து இருப்பது என்றும், தம்மீது வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்ட காங்கிரசுத் தலைமைப் பதவிக்கு முழுகுப் போட்டுவிடுவதென்றும் அவர் இப்போது இறுதியாக முடிவு செய்துவிட்டதாகத் தெரிகிறது.

தமது மாநிலத்து மக்கள், முதலமைச்சர் பதவியில் தாமே நீடிக்கவேண்டும் என்று விரும்புவதாகவும், எனவே கட்சித் தலைமைப் பதவியை விட்டுவிடக் கூடும் என்றும் அவர் பம்பாயில் தெரிவித்திருக்கிருர்.

இன்று காங்கிரசு வட்டாரத்தில் இது பற்றியே முக்கியமாகப் பேசப்படுகிறது.

அண்ணாவுக்கு வழியனுப்பு

அனுமதிச் சீட்டு ஏற்பாடு

சென்னை, ஏப். 12—

அமெரிக்கா செல்லும் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை விமானநிலையத்தில் வழியனுப்புவதற்காக வருவோருக்கு அனுமதிச் சீட்டுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விமானநிலையத்தில் 'தனி அழைப்புப் பெற்றோர் காலரி'க்குள் செல்ல 500 பேருக்கு பச்சை நிற அனுமதிச் சீட்டு வழங்கப்படுகிறது.

பார்வையாளர்கள் காலரிக்காக 150 பேருக்கு வெள்ளை நிற அனுமதிச் சீட்டு தரப்படுகிறது.

வழியனுப்புவதற்காகச் செல்ல விரும்புவோர்—பொது விவகாரத் துறைத் துணைச் செயலாளருடன் தொடர்புகொள்ள வேண்டும். ஏப்ரல் 13, 14 ஆகிய நாட்களில் காலை 10-30 மணி முதல் பகல் 1 மணி வரையிலும், மாலை 3 மணிமுதல் 5 மணி வரையிலும் அரசாங்கத் தகவல் நிலையத்தில அனுமதிச் சீட்டுகள் வழங்கப்படும்.

டில்லியில் தமிழக கவர்னர்

இந்திரா--சவானுடன் சந்திப்பு

புதுடில்லி, ஏப். 11—

தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங், இங்கு தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து சுமார் அரைமணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்.

உள்துறையமைச்சர் திரு. சவானையும் அவர் சந்தித்துத் தமிழக அரசியல் நிலைமைகள் குறித்து விளக்கமளித்தார்.

அண்மையில், சென்னையில் நடந்த பஸ் தொழிலாளர்—மாணவர் மோதல் பற்றியும் அவர்கள் முக்கியமாகப் பேசியதாகத் தெரிகிறது.

தாமதமாக வரும் இரயிலை நிறுத்தி வைத்தனர்

கோழிக்கோடு, ஏப். 11—

தலைச்சேரி இரயில் நிலையத்தில், கோழிக்கோடு—மங்களூர் பயணிகள் இரயில் வண்டி, மூன்று மணி நேரம் பொதுமக்களால் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

இரயில் நிலைய அதிகாரியையும் இரண்டு மணி நேரம் முற்றுகையிட்டு, வேலை செய்யாமல் தடுத்து வைத்தனர்.

இந்த வண்டி எப்போதுமே தாமதமாக வருவதாகவும், இது அலுவலகங்களுக்கு வேலைக்குச் செல்வோருக்கும் மாணவர்களுக்கும் மிகவும் இடையூறு ஏற்படுவதாகவும், இதன் காரணமாகவே இந்த முற்றுகைப் போராட்டத்தில் பொதுமக்கள் இறங்கியதாகவும் கூறப்படுகிறது.

பறக்கும் மோட்டார் சைக்கிள்!

புதுடில்லி, ஏப். 12—

பறக்கும் மோட்டார் சைக்கிள் ஒன்று இரஷ்யாவில் உருவாக்கப்பட்டிருக்கிறது!

விமானத் தொழில் நுணுக்கப் பள்ளி மாணவர்களால் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த மோட்டார் சைக்கிள் 230 கிலோ கிராம் எடையும், 4.8 மீட்டர் நீள இறக்கையும், 3.7 மீட்டர் நீளமும் உள்ளது.

இதில் 'காபின்' இல்லை. ஓட்டுபவருக்குக் காற்றை மறைக்கும் தடுப்புத் தகடு ஒன்று இருக்கிறது; ஓட்டும் விசையும் மிகவும் சுலபமாக அமைக்கப்பட்டுள்ளது.

28 குதிரை சக்தியுடைய மோட்டார் சைக்கிள் எஞ்சின் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

மணிக்கு 100 முதல் 105 கிலோ மீட்டர்வரை இது பறக்கும்.

ஒரு சிறிய வானொலியும் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

கைத்தறித் துணி ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டதேன்?

வலிமை நிறைந்த விலைப் போட்டியைச் சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

நெசவாளர்களைப் பாதிக்கும் நூல் விலையைக் குறைக்க வழிகோலப்படுமா?

நாட்டின் நீர் வசதிகளைப் பயன்படுத்திப் பயிர் வகைகளின் விளைச்சலைப் பெருக்குவீர் — கப்பரை ஏந்தி இரக்கும் நிலையைத் தவிர்ப்பீர் — மக்களவையில் செ. கந்தப்பன் முழக்கம்

கைத்தறித் துணிகள் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்ததற்கான காரணத்தைக் குறிப்பிட்டு—மத்திய வணிகத் துறை அமைச்சகத்தின் அறிக்கையைச் சுட்டிக்காட்டி—மக்களவையில், சழக உறுப்பினர் செ. கந்தப்பன் அவர்கள், 'உலக மார்க்கெட்டுகளில் இந்தியா கைத்தறித் துணிக்கு எதிராக ஏற்பட்டுள்ள வலிமை நிறைந்த விலைப் போட்டியை ஈடுகட்டக்கூடி யவகையில், மத்திய அரசினரால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது' என வினவினர்; நிலைமைகளைக் கண்டறிந்து நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஒரு தனி அமைப்பை உருவாக்க வேண்டுமென வற்புறுத்தினர்; செய்யப்படும் விளம்பரம் மனநிறைவு தரக்கூடியதாக இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி, விளம்பர இயக்கத்தை வேகப்படுத்த வேண்டுமென வலியுறுத்தினர்.

இலங்கையிலிருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகத் தேயிலை-ரப்பர் தோட்டங்களை உருவாக்குவதிலும், அவைகளின் உற்பத்தியிலும் ஓர் இலட்சியத் திட்டத்துடன் செயல்படும் தமிழக அரசுக்கு உடனடியாக உதவுவதற்கு மத்திய அரசு முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்; ரப்பர்—தேயிலை உற்பத்தியில் கவனிப்பற்ற போக்கு மத்திய அரசில் நிலவுவதைச் சுட்டிக்காட்டினர்.

துணித் தொழிலில் ஒரு நெருக்கடி நிலை இருப்பதைக் குறிப்பிட்டுக் காட்டிய அவர், 'நூற்பாலைகள் மூடப்படாமலிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம்' என்றார்; 'பருத்தி விலை ஒரே சீராக இருப்பதற்கு நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்; 'சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் சூழ்ச்சித் திறனுள்ள வணிகர்களுக்கு இனி இடமிருக்கக்கூடாது' எனக் குறிப்பிட்டார்.

நமக்குள்ள நீர் வசதி—பருவ வசதி போன்றவைகளைப் பயன்படுத்திச் செயலாற்றுமாறு வற்புறுத்துகையில் அவர், 'பயிர் வகைகளின் விளைச்சலைப் பெருக்கினல், கப்பரை ஏந்திச் சுற்றிச் சுற்றி இரந்துவரும் நிலைமையைத் தவிர்க்கலாம்—உயர் மட்டத்தில் வாழலாம்' எனக் குறிப்பிட்டார்.

வணிகத் துறை மானியக் கோரிக்கையின்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு அவர் ஆற்றிய உரை வருமாறு:—

"கைத்தறித் துணிசளை நேபாளம், இலங்கை, ஐக்கிய அமெரிக்கா, மலேசியா, பிரிட்டன், நைஜீரியா ஆகிய நாடுகளில் வாங்குவது குறைந்ததால் அவற்றின் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

"ஜப்பான், ஹாங்காங், பாகிஸ்தான், சீன ஆகிய நாடுகளின் வலிமை நிறைந்த விலைப் போட்டியும், ஏற்றுமதிக்குச் சிறந்த வேறு ரகங்களை உடனடியாக அனுப்ப முடியாமையும் கைத்தறித் துணி ஏற்றுமதியில் குறைவு ஏற்பட்டதற்குக் காரணமாகும்"

என்று, வணிகத்துறை அமைச்சக அறிக்கையின் 12-ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

ஏற்றவாறு தயாரிக்க ஏன் இயலவில்லை?

உலக மார்க்கெட்டில், நமது கைத்தறித் துணிப் போட்டியில் ஈடு கட்டக்கூடிய நிலைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

கைத்தறி வாரியமும், ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவும் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது, நமது பழமை வாய்ந்த வெளிநாட்டுச் சந்தைகளுக்கு ஏற்றவாறு துணிகள் தயாரிக்க ஏன் முடியாமல் போய்விட்டது?

தனி அமைப்பு உருவாக்குக!

நமது பழைய மார்க்கெட்டுகளுக்குத் தேவையான ரகங்கள் பற்றிக் கண்டறிவதற்கு ஒரு தனி அமைப்பு வேண்டுமென்பது என் ஆலோசனையாகும்.

அவர்கள் கண்டறிந்த ரகத்திலான துணிகள் பற்றி நமது கைத்தறித் துறையினரிடையே விளம்பரமும், அறிமுகமும் செய்தல் வேண்டும்.

பார்க்கப்போனல், கைத்தறித் தொழில் இந்த நாட்டின் பழமையான—நன்கு நிறுவப்பட்ட தொழிலாகும்.

நம்முடைய கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டால், உலக மார்க்கெட்டில் போட்டியிட அவர்கள் தகுதியுடையவர்களே யாவர்!

இந்த நடவடிக்கைகள் வளர்ச்சியடைய ஒரு தனி அமைப்பு ஏற்படுத்துமாறு அரசிடம் வலியுறுத்துகிறேன்.

தேக்கத்திற்கு என்ன காரணம்?

விலைகள் சம்பந்தப்பட்ட வரையில் நெசவாளர்களைப் பாதிப்பது நூலின் விலையாகும்.

நூல் மார்க்கெட்டில் உள்ள தேக்க நிலையை அமைச்சர் அறிவார்.

'நெருக்கடி' எனப்படும் நிலைக்கு—முக்கியமாக தென்னகத்தின் நிலைக்கு இந்தத் தேக்கமே காரணமாகும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அவசர காலத்துக்குப் பயன்படும்வகையில், நூலை வாங்கவும், இருப்பு வைக்கவும் ஒரு தலைமை அமைப்பு ஏற்படுவதற்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அவ்வித ஏற்பாட்டின் மூலம் மார்க்கெட்டில் நூல் பஞ்சமும், விலையேற்றமும் ஏற்படும்போது நெசவாளர்கள் உதவி பெற முடியும்; அவர்களுடைய துணிகளின் அடக்க விலை பெரும் அளவில் குறைவதற்கும் அது உதவியாக இருக்கும்.

செய்யப்படும் விளம்பரம் நிறைவு தரக்கூடியதா?

மேலும் இரண்டு யோசனைகள் கூறவேண்டியிருக்கிறது; நம்முடைய வெளிநாட்டு விளம்பரம் மனநிறைவு தரக்கூடியதாக இல்லை என்பதோடு அதைப்பற்றிய புகார்களும் உள்ளன.

எனவே, நம் துணிகளை, பழமை வாய்ந்த மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற்கு அரசு, தன் விளம்பர இயக்கத்தை வேகப்படுத்தவேண்டும்.

இதுபற்றி மேலும் ஒரு கோரிக்கை வைக்க விரும்புகிறேன்; சில நாட்களுக்குமுன் சென்னையில் கைத்தறி வார விழா நடந்தபோது, அமைப்பு முறையில் அமைந்த கைத்தறித் துறையில் உள்ளோர், 'இந்த நாட்டில் கைத்தறித் துணிக்குக் கிராக்கி ஏற்படுத்தும்வகையில் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும்' என்று யோசனை கூறப்பட்டது. அரசு இந்தக் கோரிக்கையை, பயன் தரும் வகையில் ஆலோசிக்கவும், அதன் மூலம்—மேற்கூறியபடி வெளிநாடுகளுக்கு அலுவலர்களை அனுப்பி, இதுவரையில் கைத்தறித் துணி விலையாகிவந்துள்ள பகுதிகளில் விற்பனையைப் பெருக்கவும், தேவையான வசதிகளையெல்லாம் தந்துதவுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

தேயிலை-ரப்பர் தோட்டங்களை உருவாக்குவதில் தீவிர இலட்சியத்துடன் செயல்படும் தமிழகத்திற்கு மத்திய அரசு உதவுமா?

தேயிலை உற்பத்தியில் இலட்சியத் திட்டம்

தேயிலை உற்பத்தி பற்றியும் ஏற்றுமதி பற்றியும், வணிகத் துறை அமைச்சக அறிக்கையின் 54 பக்கத்தில் ஒரு வேடிக்கையான வாசகம் உள்ளது:—

"1968-ல் உற்பத்தியான 38.48 கோடி கிலோகிராம் தேயிலைக்கு மாறாக, 1967-ல் 37.98 கோடி கிலோகிராமே மொத்தம் உற்பத்தியாகி உள்ளது. 1967-ல் 50 இலட்சம் கிலோகிராம் உற்பத்தியில் அதிகமாகியுள்ளது."

மேற்கூறிய அறிக்கையில் உள்ள எண்களின்படி, 1967-ல் 50 லட்சம் கிலோகிராம் குறைவாக உள்ளது.

வணிகத்துறை அமைச்சகத்தின் கணக்குகளாவது சரியாக வைக்கப்பட வேண்டுமென விரும்புகிறேன்.

இது ஒருபுறமிருக்க, தமிழ்நாட்டில் தேயிலை உற்பத்தியில் தீவிரமான ஓர் இலட்சியத் திட்டத்தோடு செயல்பட விரும்புவதை அமைச்சர் அவர்கள் அறிவார்.

தொழில் வளர உதவுக

இலங்கையிலிருந்து குடிபெயர்ந்து வருபவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் இப்போதைய தேயிலை, இரப்பர் தோட்டங்களில் அவர்களைக் குடியமர்த்துவதுடன், தமிழகத்தில் மேலும் புதிதாக தேயிலை, இரப்பர் தோட்டங்களை ஏற்படுத்துவது அவசியமாகும்.

எனவே, தேயிலைக் குழுவும் – மத்திய அரசும், தமிழகத்தில் இந்தத் தொழில் வளருவதற்கென இயலக்கூடிய எல்லா உதவிகளையும் நல்கச் செய்ய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன்.

கிளைகள் ஏற்படுத்துக!

இங்கு ஒரு வேண்டுதல்விட விழைகிறேன்; இப்போது தேயிலைக் குழு அலுவலகம், கல்கத்தாவில் இருக்கிறது. தேயிலைக் குழுவின் வேலைகள் பெருமளவு விரிந்த பிரதேசத்திலும் பரந்த அளவிலும் நடைபெறவேண்டியுள்ளதால், பல்வேறு இடங்களில் அதன் வேலை முறைகள் கவனிக்கப்படும் வகையில் கிளைகள் அமைவது நலமாகும்.

தெற்கில் அதற்கு ஒரு கிளையும், தேவையானல் வடக்கில் ஒரு கிளையும் ஏற்பட வேண்டும்; இதனை அரசு ஆலோசித்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம்.

என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

பின்னும் ஒரு சிக்கல் பற்றி கவனிககுமாறு அமைச்சரை அழைக்கிறேன்.

சில காலத்துக்குமுன், அவருக்கு முன்னலிருந்தவரின் பதவிக் காலத்தின்போது, அந்தமானில் உள்ள தேயிலை, ரப்பர் தோட்டங்கள் பற்றி இந்த அவையில் ஒரு கேள்வி கேட்டேன். அந்த விஷயத்தில் மிகத் தீவிரமாக நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்தார் ஆனல் அந்த விஷயத்தில எவ்வித நடவடிக்கையுமே அவர்கள் எடுக்கவில்லை என்று கண்டு வருத்தமுற்றேன்.

சில ஆண்டுகளுக்குமுன் நான் அந்தமானுக்குச் சென்றிருந்தபோது அங்கே ஒரு ரப்பா தோட்டம் கவனிப்பற்ற நிலையில் கிடக்கக் கண்டேன்; அங்கு ரப்பர் நன்றாக உற்பத்தியாகும் என்றும், பயன் மிகத் தரும் தோட்டங்கள் அங்கே உண்டாக்க முடியும் என்றும் அங்குள்ளவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

தொடர்ந்து செயல்படுத்த முன்வருமா அரசு?

தேயிலை உற்பத்தி செய்வதுபற்றிய நடைமுறைபற்றி ஆய்வொன்று நடத்தப்பட்டு, அதன் மூலம், 'உற்பத்தி வெற்றியளிக்கும்' என்று அறிந்தும், வணிக முறையில் தேயிலை உற்பத்திக்கான எவ்விதத் தொடக்க வேலையும் செய்யப்படவில்லை என்று கேள்விப்பட்டேன்.

முந்திய வணிகத் துறை அமைச்சரிடம் கேள்வி ஒன்று கேட்டபோது, அந்தமானில் உள்ள இயற்கை வளத்தின் சாத்தியக்கூறுகள்மூலம், வணிக நன்மைகள் அமைவதற்கான செயல் முறையில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்தார். இப்போதைய அமைச்சர், இந்த முறையினை மேலும் தொடர்ந்து செயல் புரிய வேண்டுகிறேன்.

துணித் தொழிலில் நெருக்கடி நிலை

பருத்தி உற்பத்தி முதலியவற்றோடு நெருங்கிய தொடர்புள்ள பருத்தித் துணி வணிகம்பற்றித் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன்.

வணிகத் தொழிலில் ஒரு நெருக்கடி நிலை இருப்பதை அமைச்சர் நன்கறிவார்.

கோவையிலும் மற்ற இடங்களிலும் நூற்பாலைகளை மூடிவிட யோசனை உள்ளது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு தீவிரமாய் முயலுகிறது. இந்த விஷயத்தில் அரசு சிரத்தை கொள்வதனை நான் பாராட்டுகிறேன்.

நூற்பு ஆலைகளோ, அது தொடர்பு கொண்ட வேறு ஆலைகளோ மூடப்படாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இல்லையேல், மூடப்பட்ட பகுதியில் தொழிலாளர் பிரச்சினை கடுமையாகிவிடும்!

ஆலைகளால் பயன்படுத்தமுடியாத அளவுக்கு நூல் பெருகிக் குவிந்திருக்குமானல், அரசே முன்வந்து அதனை வாங்கி—வெளியில் மார்க்கெட் கிட்டினல்—விற்பனை செய்யலாம்; அல்லது, அதனை அவசரகால இருப்பாக வைத்து சமயத்தில் பயன்படுத்தலாம்.

நடைமுறையில் எவ்வாறு செயல் படுத்துவீர்?

பருத்தி விலை ஒரே சீராக இருக்குமாறு பார்த்துக்கொள்வதில் கடந்த இரண்டொரு ஆண்டுக் காலமாக அரசு நிலைத்த கொள்கையைக் கடைபிடிப்பதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்; அவர்கள் அறிக்கையின் 70-ம் பக்கத்தில் குறிப்பிட்டதாவது:-

"மற்றொரு வகையில் குடியானவர்களுக்கு உறுதியளிக்கும் வகையில், குறைந்தபட்ச உதவி விலையாக முந்திய ஆண்டிலிருந்தே தல விலையில் 5-முதல் 10-சதவீதம் வரை மேற்கொண்டு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது; அந்த விலையில் எவ்வளவு

(3-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசின் உற்பத்திப் பெருக்கத் திட்டத்துக்கு உதவுக!

நாடாளுமன்றத்தில் சிட்டிபாபு வற்புறுத்தல்

புதுடில்லி, ஏப். 10—

நாடாளுமன்றத்தில், உணவு — வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட பல உறுப்பினர்கள், சமூக நலத் திட்டம், மத்திய அரசின் சர்க்கரைக் கொள்கை, கூட்டுறவுத் துறை செயல்படும் விதம் ஆகியவற்றினால் ஏற்படும் கேடுபாடுகள் குறித்துக் கடுமையான கண்டனம் தெரிவித்தனர்.

"மீன்வளத் துறையில் மத்திய அரசு அதிக கவனம் செலுத்தி. இந்தியக் கடற் செல்வத்தை பெருக்கவேண்டும்" என்று, இவ்விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கழக உறுப்பினர் சி. சிட்டிபாபு குறிப்பிட்டார்.

"நாட்டின் உணவுப் பிரச்சினையைச் சமாளிக்க நீர்ப்பாசனம், மின்விசை ஆகிய துறைகளை மத்திய உணவு அமைச்சர் ஜெகஜீவன்ராம் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்" என்றும் அவர் வற்புறுத்தினார்.

"தமிழக அரசு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க மத்திய அரசிடம் கோரிய ரூ. 10 கோடியை மத்திய அரசு கொடுக்க வேண்டும்; நவீன விசைப் படகுத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டும்" என்றும் அவர் கோரினார்.

வேலை நீக்கம்பெற்ற போலீசார்

உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனு

கள்ளிக்கோட்டை, ஏப். 10—

'மலபார் ஸ்பெஷல் போலீசை'ச் சேர்ந்த 250 போலீசார் இந்தியாவில் எங்கே வேண்டுமானாலும் பணியாற்றவேண்டிய மத்திய ரிசர்வ் போலீசுப் படையில் பணியாற்ற விரும்பாத காரணத்தினால், கேரள அரசு அவர்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறது.

வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களில் 90-பேர் தங்களை வேலையிலிருந்து நீக்கியதை எதிர்த்துக் கேரள உயர் நீதிமன்றத்தில் 'ரிட்' மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

'ரிட்' மனுக்கள் விசாரணை செய்யப்பட்டுத் தீர்ப்பளிக்கப்படும் வரையில் அவர்கள் தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்; மற்றவர்கள் ஏப்ரல் முதல் நாளிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய ரிசர்வ் போலீசுப் படையில் சேர விருப்பம் தெரிவிக்காத 59 அவில்தார்கள், போலீசுக்காரர்களாகப் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

மக்கள் சபையில் கந்தப்பன் பேச்சு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தி வேண்டுமானாலும் வாங்குவதற்கு அரசு தயாராக இருக்கும் என்று அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது."

இது நல்லதொரு திட்டம்; ஆனால் இதை எவ்வாறு நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள்?

சூழ்ச்சித் திறனுள்ள வணிகர்கள் இலாபத்திற்கு வழிகோலாதீர்!

தல விலை என்பதொன்று உள்ளது பற்றியும், குடியானவர்களுக்குச் சிரமம் ஏற்படும்போது தல விலையில் பருத்தியினை வாங்கிக் கொள்ள அரசு தயாராக இருப்பது பற்றியும் குடியானவர்கள் தெரிந்துகொள்ளச் செய்ய என்ன வழிமுறை வைத்திருக்கிறீர்கள்? "நாட்டின் சில இடங்களில் பருத்தி விளைச்சல் அதிகமாகக் காணக்கூடிய நிலையுள்ள சமயம் இது' என்பதாலேயே இதனைச் சொல்லுகிறேன்.

இந்த அதிக விளைச்சல் மார்க்கெட்டுக்கு வருமானால், சூழ்ச்சித் திறனுள்ள வாணிகர்கள் எவ்விதத் தயக்கமுமில்லாமல் இந்தச் சந்தர்ப்பத்தைத் தங்கள் இலாபத்திற்குப் பயன்படுத்திக் கொள்வார்கள்!

அறிவிப்பதில் எவ்விதத் தாமதமும் கூடாது!

அரசு நிர்ணயித்த தல விலை பற்றியோ, இதனை எந்தத் துறையினரிடம் விசாரித்து எங்கு விற்பது—எங்கே போவது போன்ற விஷயங்கள் பற்றியோ குடியானவர்களுக்குத் தெரியாது!

மத்திய அரசு இந்த மாதிரியாக முடிவெடுத்ததும், உடனடியாக எவ்வித தாமதமுமின்றி அதனை மாநில அரசுகளுக்கு அறிவிக்க வேண்டும்.

பருத்தி விலை தல விலையிலிருந்து குறைந்தால், குடியானவர்களுக்கு உதவி செய்ய அரசு ஏற்பாடு இருக்கிறது—என்று குடியானவர்களும் உணரச் செய்ய வேண்டும்.

தல விலை பற்றிய விவரம் குடியானவர்களுக்குக் காலத்தில் கிடைக்கும் நிலை இல்லையென்றால், இதற்கென ஏற்படுத்தப்படும் துறையினர், குடியானவர்களுக்கான உதவிகளைச் செய்து அதிக விலைவு பருத்தியை வாங்கிக் கொள்ள வேண்டும்.

கட்டுப்படுத்த முயற்சிப்பீர்!

நுட்ப திட்டமான வேலைகளுக்குப் பயன்படும் வகையில் சிறந்த ரசப் பருத்தி தேவைப்படுவதால், இறக்குமதியை நிறுத்துவது முடியாது என்று சொல்லுகிறீர்கள்; என்றாலும் அதைக் கட்டுப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். குறைந்த அளவு பருத்தியே இறக்குமதி செய்யுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

வாய்ப்புகள் உள்ளன— சிந்தித்து செயல்படுவீர்

நம் நாட்டில் பருத்தி விளையும் நிலப்பரப்பை அதிகமாக்கியும், விளைச்சலைப் பெருக்கியும், அதிக விளைச்சல் காண வாய்ப்புக்கள் உள்ளன. இந்த வழியில் அரசு சிந்தித்து நிலைமையை சீர்பெருகச் செய்யட்டும்.

மறுப்பு தெரிவிப்பதால் பலன் என்ன உண்டு?

வெளிநாட்டு நாணயமாற்று விஷயத்தில் நாம் மிகவும் பலவீனமாக இருக்கிறோம்; அதுபற்றி மகிழ்ச்சியான நிலையில் இல்லை!

'சுற்றிச் சுற்றி இரந்துவருகிறோம்' என்று நாங்கள் சொன்னால், அரசு பேச்சாளர், உடனே தம் பலமான மறுப்பினைத் தெரிவிக்கிறார்.

நமக்குள்ள நீர் வசதி — பருவ வசதி முதலியன உட்பட பூகோள ரீதியான நிலைகளை வைத்துக்கொண்டு பார்க்கும் போது, 20 அல்லது 25 ஆண்டுகளுக்குப் பிறகு செயல்பூர்வமாக வலுப்படுத்த வேண்டிய நமது நிலை வலுப்படுத்தப்படவில்லை!

உதாரணமாக, பருத்தி, நிலக்கடலை, மற்றும் அநேக பயிர் வகையின் விளைவைப் பெருக்கி —வெளிநாட்டு ஏற்றுமதியை மிகுதிப்படுத்தி — வெளிநாட்டு நாணயமாற்றில் ஒரு சமமான— சௌகரியமான நிலையை உருவாக்கியிருக்கலாம்; ஆனால் அதில் தவறிவிட்டார்கள்!

கப்பரை ஏந்திச் சுற்றிச் சுற்றி இரந்துவருவதை விடுத்து, நமது தரத்தை உயர்த்தி வாழவேண்டிய உயர்மட்டத்தில் வாழ்வோமாக!"

யானைக் கால் நோய்க்கு மருந்து

இலண்டனில் புதிய ஆராய்ச்சி

வெப்பப் பகுதியில் பெரிதும் காணப்படும் யானைக்கால் நோய்க்கு ஏற்ற மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி இலண்டனில் நடைபெறுகிறது.

கொசுக்களினால் உண்டாகும் இந்த நோயைக் குணப்படுத்தும் முறைக்கு அந்தக் கொசுக்களில் ஒரு வகையையே எடுத்துப் பரிசோதனை நடத்துகிறார்கள்.

இரத்தத்திலிருந்து சுரக்கும் ஒரு வகை திரவத்தின் (நிணநீர்) சுரப்பிகள், புழுக்களால் அடைபடுவதால், சுரக்கின்ற திரவம் வெளியேற முடியாமல் தேங்கி—அந்தப் பகுதியின் சதை மட்டும் விகாரமான அளவுக்கு வீங்கி—பருத்துக் காணப்படுகிறது; இதனைத்தான், யானைக்கால் (யானைக்கை) நோய் என்கிறோம்.

இந்தப் புழுக்கள், கொசுக்களின் உடலோடு ஒட்டியிருந்து உயிர் வாழ்கின்றன. மனிதன் மேல் கொசுக்கள் உட்கார்ந்து கடிக்கும் போது, இவற்றில் சிலவற்றை மனித உடலில் விட்டுவிடுகின்றன. இப்படி உடலுக்குள் புகுந்துவிட்ட புழுக்கள் அங்கேயே வளர்ந்து—பல்லாயிரக்கணக்கான நுண்ணிய புழுக்களை உற்பத்திசெய்து—இரத்தத்தில் கலந்துவிடுகிறது; இதன் விளைவாகவே இந்த நோய் ஏற்படுகிறது.

ஆராய்ச்சியின் முதல் கட்டமாக கொசுக்களைப் பிடித்து அவை எப்படிப் புழுக்களை தம்முள் அடக்கி வைத்துக் கொள்கின்றன—எப்படி அவற்றை மனித உடலில் செலுத்துகின்றன — இவற்றைக் கட்டுப்படுத்துவது—குறைப்பது எப்படி என்பன என்ற விவரங்கள் தயாரிக்கப்படுகின்றன.

யானைக்கால் நோய் தவிர, கொசுக்களால் பரவும், பிற நோய்களான மலேரியா, மஞ்சள் நோய், 'டெங்கு' காய்ச்சல் போன்ற நோய் தடுப்புக்கும் இந்த ஆராய்ச்சி வழிசெய்யும் என நம்பப்படுகிறது.

தெ.ஆ., வ.ஆ. ஆசிரியர் தொகுதித் தேர்தல்

திண்டிவனம் வட்டச் செயலாளர் வேண்டுகோள்

திண்டிவனம் வட்ட தி மு. க. செயலாளர் ஆ. தங்கவேலு அறிவிப்பதாவது:—

"தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு நடைபெறவிருக்கின்ற தென் ஆற்காடு — வட ஆற்காடு ஆசிரியர் தொகுதித் தேர்தலில் தலைமைக் கழக வேட்பாளர் ப. உ. சண்முகம் அவர்களை வெற்றியடையச் செய்வது நம் அனைவருடைய பொறுப்பாகும்.

"அறிவாற்றல்மிகு ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் தாங்கள் தங்கள் மேலான வாக்கினை ப. உ. சண்முகம் அவர்களுக்கு அளித்து வெற்றியடையச் செய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

"திண்டிவனம் வட்டத்திலுள்ள கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் ஆசிரியப் பெருமக்களை அணுகி, திரு. ப. உ. சண்முகம் வெற்றியடைய தீவிர முயற்சியில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறேன்."

நெசவாலைகளை எடுத்து நடத்தத் தனி நிறுவனம்

ரூ. 10 கோடி முதலீட்டில் பதிவு

புதுடில்லி, ஏப். 11—

நாட்டில் நிதி நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள நெசவாலைகளை எடுத்து நடத்துவதற்காக, 'தேசிய துணித் தொழில் கார்ப்பரேஷன்' என்ற நிறுவனம் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாவன:—மத்திய அரசு ஒப்படைக்கும் துணி ஆலைகளை எடுத்து நடத்துவது; பஞ்சாலைகளை நிறுவி அவற்றை நடத்துவது; துணித் தொழில்களை நடத்தும் கம்பெனிகள், நிறுவனங்கள் பங்குதாரராகச் சேருவது; எல்லா வகையான நூல்களையும் தயாரிப்பது ஆகியவையாகும்.

இந்த நிறுவனம் ரூ 10 கோடி வரையில் மூலதனம் திரட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது; ஒவ்வொரு பங்கின் விலையும் ரூ. 1,000 ஆகும்.

சென்னை நகர ரேஷன் வியாபாரிகள் மத்திய செயல் கமிட்டி

8—4—68-ல் சென்னை-மயிலாப்பூர் இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில், சென்னை நகர ரேஷன் வியாபாரிகள் மத்திய செயல் கமிட்டியின் 2-வது ஆண்டு விழா விற்குப் பிறகு நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் 1968—69-ம் ஆண்டிற்கான நிர்வாகிகளும், 29 செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: பி. ஏ. என். இராசரத்தினம்; துணைத் தலைவர்கள்: ஜி. வெங்கடேசன்; எஸ். எஸ். மாரியப்பன், டி. இராகவன், ஜி முனுசாமி, ஏ. எம். அத்தா உல்லா; பொதுச்செயலாளர்: எஸ். விநாயகம்; செயலாளர்கள்: எம். சாமுவேல் துரைராஜ், எஸ். ஏ. பாண்டியன்; பொருளாளர்: எம். புன்னியகோட்டி.

வேளாண்மையில் புதிய முறைகளைக் கையாள வேண்டும்

கிராம மக்களிடையே அமைச்சர் மதியழகன் வலியுறுத்தல்

மதுராந்தகம், ஏப். 10—

"சமுதாய நலத் திட்டங்கள் நல்ல முறையில் பயன்பட்டால் தான், கிராம மக்களின் வாழ்க்கை முறை உயர இயலும்; அனைவரும் இதனை உணருவது அவசியம்.

"கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு பாடுபட்டு வருகிறது; தேசிய வருமானம் பாதிக்குமேல் கிடைப்பது விவசாயத்திலிருந்துதான்; விவசாயிகளின் தேவைகளை அரசு அளிப்பதுடன், அவர்களின் வாழ்க்கையை உயர்த்தவும் பாடுபட்டு வருகிறது.

"விவசாய வளர்ச்சி—உணவு உற்பத்தி இரண்டும் நல்ல நிலையில் வளர வேண்டும்; பழைய நிலையிலேயே விவசாயிகள் இல்லாமல், தற்கால நவீன விஞ்ஞான முன்னேற்றங்களை விவசாயத்தில் புகுத்தவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்"

இவ்வாறு உணவுத்துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றிப்பு அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள விவசாயக் கிடங்கைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதன் கிரகத்தில் இருப்பது என்ன?

புதன் கிரகம் சூரியனிலிருந்து 5 கோடியே 80 இலட்சம் கிலோமீட்டர் தொலைவில் உள்ளது;

அது சூரியனுக்கு அண்மையில் உள்ளது; சூரிய மண்டலத்திலுள்ள மிகச் சுவையான கிரகங்களில் அது ஒன்று.

புதனின் மேற்பரப்பானது சந்திரன், செவ்வாய் ஆகியவற்றின் மேற்பரப்பைப் போன்றது.

புதன் கிரகத்தில் ஒளியும் இருளும் நிறைந்த பகுதிகளும், ஆழமான வெடிப்புகளும், பள்ளங்களும் உள்ளன.

சந்திரனில் உள்ளதைப் போன்ற பாறைகள் புதனிலும் உள்ளன.

புதன் கிரகத்தின் மெல்லிய வாயு மண்டலத்தில், 'கார்பன் டை ஆக்சைடு' உள்ளது.

புதன் கிரகத்தின் குறுக்களவு பூமியின் குறுக்களவில் மூன்றில் ஒரு பங்குக்கும் குறைவான தாகும்.

ஐ. நா. பேரவை அதிகச் செலவு செய்கிறதா?

ஊ-தாண்ட் தரும் பதில்

பிரஸ்சல்ஸ், ஏப். 11—

"ஐக்கிய நாட்டுப் பேரவை அதிகப் பணம் செலவழிக்கும் நிறுவனமாக இருக்கிறது" என்று பலர் தம்மிடம் தெரிவித்திருப்பதாக ஐ நா. பொதுச்செயலாளர் ஊ-தாண்ட் இன்று கூறினார்.

"வியட்நாம் போரில் எல்லாக் கட்சியினரும் ஒரு நாளில் செல

(5-ம் பத்தி பார்க்க)

(1-ம் பத்தி தொடர்ச்சி)

வழிக்கும் தொகை, ஓராண்டில் ஐ.நா. பேரவைக்குச் செலவழிக்கப்படும் தொகைக்குச் சமமாகயிருக்கிறது" என்று அவர் தெரிவித்தார்.

"வியட்நாம் போரில் ஓராண்டுக்குச் செலவாகும் தொகை அடுத்த 365 ஆண்டுகள் ஐ.நா. பேரவைக்குச் செலவாகும் தொகைக்குச் சமமாக இருக்கும்" என்று அவர் சொன்னார்.

"யானைக்கும் கொசுவுக்கும் நடைபெறும் போரைப் போன்றிருக்கிறது வியட்நாம் போர்" என்றும் அவர் வர்ணித்தார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

13--4--68

சென்னை 26-வது வட்டம்

எம். ஜி. ஆர். தோழமைக் கழக ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சி ; மாலை 6-30 மணிக்கு பெத்துநாயக்கன் பேட்டை முல்லா சாகிபு தெருவில் (ரவுண்டு குழாய் அருகில்) ; தலைவர் : எஸ். எம். முருகேசன்; பேசுவோர் : அமைச்சர் ஏ. கோவிந்தசாமி, கி. மனோகரன் எம்.பி., அ. க. அ. அப்துஸ் சமது எம்.பி., டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., எஸ். இராகவானந்தம் எம்.எல்.சி., எம்.ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., வி. ஆர். வீரஜின்னு, சைதை சம்பந்தம் எம்.சி., சேதுராசன், (காலை 11-மணிக்கு ஜி. இலட்சுமிபதி எம்.சி. தலைமையில் டாக்டர் எச். வி. ஹாண்டே எம்.எல்.ஏ. அவர்கள் ஏழைகளுக்கு உணவு அளிப்பார் ; மூன்றும் நாள் நிகழ்ச்சி : 14--4--68 மாலை 6-30 மணிக்கு கே. எஸ். தினகரன் தலைமையில் சதாசிவம்–மோகனு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

14--4--68

சென்னை

டாக்டர் அம்பேத்கார் நினைவு டிரஸ்ட் சார்பில் மாலை 6-30 மணிக்கு நேரு விளையாட்டரங்கு எதிரில் ; தலைவர் : எல். இளைய பெருமாள் ; பேசுவோர் ; அமைச்சர் கே. ஏ. மதியழகன், அமைச்சர் சத்தியவாணிமுத்து, மீனும்பாள் சிவராஜ், ஜோதி வெங்கடாசலம், செளந்திரம் அமிர்தவாசகம், க. மணிமேகலன், புலவர் இரா. வெ. இராமச்சந்திரனுர், வ. வீராசாமி பி,ஏ., மு. சுந்தரராசு.

சென்னை 75-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு திருவல்லிக்கேணி தேரடித் தெருவில் ; தலைவர் : பொ. மாணிக்கம் ; பேசுவோர் : அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், இரா. சனுர்த்தனம் எம்.ஏ., இளம்பரிதி, மு. வரதராசன், சி. ஆதிகேசவன், பி. என். எஸ். மணி.

ஆம்பூர்

19-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு முகமதலி திடலில் ; தலைவர் : ஜி. வி. முனிரத்தினம் பி.ஏ.பி.எல்.; பேசுவோர் : தமிழரசி பி.ஏ., ஆர். சம்பங்கி, எம்.பன்னீர்செல்வம், எம். எல்.ஏ., சி. கே. சின்னராசு எம். எல்.ஏ., டி. சி. திம்மராயன் எல். எம். ஏ., கே. ஆர். சந்திரன், பி. தங்கராசு, நா. பார்த்தசாரதி, டி. கே. இராசா.

பட்டிவீரன்பட்டி

எம். ஜி. ஆர். மன்ற 2-வது ஆண்டு விழா ; மாலை 6-30 மணிக்கு பாண்டியனுர் திடலில் ; தலைவர் : மா. பாஸ்கரன் ; பேசுவோர் : தமிழ்மாறன், மு. வெ. வன்னியராசன், மற்றும் பலர். (மணிவண்ணன்—பத்மினி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

மன்னுர்குடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பெரிய கம்மாளத் தெருவில் ; தலைவர் : மு. தில்லைக்கண்ணு ; பேசுவோர் : பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., ப. நாராயணசாமி, சு. நாராயணசாமி, கு. பாலகிருட்டிணன், கோ. சிவஞானம், இரர. கணேசன், மற்றும் பலர், (ஏ.எம்.ஏ. ரகீம் இன்னிசை வழங்குவார்.)

எடமலைப்பட்டி புதூர்

எம். ஜி. ஆர். மன்ற முதலாவது ஆண்டு விழா ; மாலை 6-மணிக்கு அண்ணு திடலில் ; தலைவர் : என். ஆடியபாதம். முன்னிலை : டி. பி. மருதையா ; கொடியேற்றுபவர் : ப. இரத்தினம் ; பேசுவோர் : நடிகர் செளந்தரராசன், வி. எம். கணேசன், நடராசன், டாக்டர் இராசன், என் பாலசுப்பிரமணியன், ஆர். தங்கவேல், ஏ. பாக்கியம், பி. பெரியசாமி, ஆர். பழனிராசன்.

16--4--68

மஞ்சக்கொல்லை

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பொங்காளம்மன் கோயில் திடலில் ; தலைவர் : எஸ். தட்சிணுமூர்த்தி ; பேசுவோர் : சி. பி. சிற்றரசு எம்.எல்.சி., எஸ். தியாகராசன் பி.ஏ.பி.எல்., பொ. கணபதி, ஏ. அம்பலவாணன், டாக்டர் பி.எம். மொய்தீன், என். பக்கிரிசாமி எம்.சி.

செஞ்சி

வட்ட திராவிட முன்னேற்ற விவசாயிகள் சங்கச் சார்பில் பாராட்டுக் கூட்டம் ; மாலை 7-மணிக்கு செட்டிப்பாளையம் குளக்கரைத் திடலில் ; பாராட்டுப் பெறுவோர் : வி. சுப்பிரமணியம், டி. ஏ. எஸ். பாலன் பி.ஏ., பி எல்., எம்.சி., எஸ். சகாதேவன் ; பாராட்டு இதழ் அளிப்பவர் : எஸ். விசயராகவன் ; பாராட்டு வழங்குவோர் : சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.எல்.ஏ., கே. பாண்டுரங்கன் பி.ஏ.பி.எல்., எம். சுந்தரமூர்த்தி, எஸ். பக்கிரி, அபூபக்கர்.

கடையநல்லூர்

அறிவு வளர்ச்சிக் கழகச் சார்பில் மாலை 6-மணிக்கு மாவடிக் கால் ஆர். ஆர். திடலில் ; தலைவர் : பா. ரா. சுப்பையா ; பேசுவோர் : சுரண்டை புலவர், ப. அழகையா, சம்சுதீன். சி. நடராசன். (மணி—சாமி குழுவினர் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

குழுக் கூட்டங்கள்

குடியேற்றம் வட்டம்

குடியேற்றம் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 14—4—68 பிற்பகல் 2-மணிக்கு வளத்தூர் செயலாளர் இல்லத்தில் (கடைவீதி) நடைபெறும் ; வட்டக் கழக உறுப்பினர்களும், மற்றும் கழக முக்கியத் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் பி. கே. முனுசாமி கேட்டுக்கொள்கிருர்.

திருவொற்றியூர்

நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 13—4—68 காலை 9-மணிக்கு சன்னதி தெரு சஷ்டி மடத்தில் நடைபெறும் ; பொது உறுப்பினர் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு செயலாளர் வை. பார்த்தசாரதி கேட்டுக் கொள்கிருர்.

கடையநல்லூர்

நகர தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 14—4—68 இரவு 9-30 மணிக்கு மேலப்பாளையம் உயர் துவக்கப் பள்ளியில் நடைபெறும் ; உறுப்பினர் அனைவரும் தவருது கலந்துகொள்ளுமாறு செயலாளர் சி. நடராசன் கேட்டுக் கொள்கிருர்.

சென்னை 53-வது வட்டம்

"கோ. சு. மணி நினைவு மன்றம் —எம். ஜி. ஆர். நூலகம் ஆகியவற்றின் டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழாக் குழு உறுப்பினர் கூட்டம், 13—4—68 மாலை 6-30 மணிக்கு மன்றப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் இரா. கு. வள்ளிமணுளன் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13.) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

டாக்டர் அம்பேத்கார் பிறந்த நாள் விழா

அமைச்சர் சத்தியவாணிமுத்து பங்கேற்பு

சென்னை டாக்டர் அம்பேத்கார் நினைவு டிரஸ்ட் சார்பில் 14—4—68 காலை 6 மணிக்கு நேரு விளையாட்டு அரங்கு எதிரிலுள்ள டாக்டர் அம்பேத்கார் உருவச்சிலை அருகில் 77-வது பிறந்த நாள் விழாக் கொண்டாடப்படும் ; திரு. எல். இளையபெருமாள் தலைமைவகிப்பார் ; நாடாளுமன்ற உறுப்பினர் பி. சிவசங்கரன், ஜி. குசேலர் ஆகியோர் முன்னிலையில் அமைச்சர் சத்தியவாணிமுத்து, அம்பேத்கார் உருவச் சிலைக்கு மாலையணிவிப்பார் ; சி. ஆர். அமிர்தவாசகம் பெயரால் அமைந்துள்ள வரலாற்றுக் காட்சியையும் அமைச்சர் திறந்துவைப்பார்.

அடுத்து, காலை 7 மணிக்கு மேல்பட்டடையிலும், அடுத்து புழல் கிராமத்திலும் உள்ள அம்பேத்கார் உருவச் சிலைக்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள் மாலையணிவிப்பார்.

புழல் கிராமத்தில் டாக்டர் அம்பேத்கார் பூங்காவைத் திறந்து வைப்பார்கள் ; புழல் ஊராட்சி மன்றச் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்படும்.

மாலை பொதுக்கூட்டத்திலும் அமைச்சர் கலந்துகொள்வார்.

மணி -- சாமி குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

ஏப். 14 : இராசபாளையம் ; 15 : மல்லி ; 16 : கடையநல்லூர் ; 17 : கோவில்பட்டி ; 18 : வள்ளியூர் ; 19 : ஏரல் ; 20, 21 : தென்காசி (தொகுதி) ; 22 : திருச்செந்தூர் ; 23 : திருவைகுண்டம் ; 24 : திருச்கோட்டியூர் ; 25 : மண்டபம் ; 26 : இராமேசுவரம் ; 27 : தங்கச்சி மடம் ; 28 : இராமநாதபுரம் ; 29 : பாண்டியூர் ; 30 : பரமக்குடி.

முருகு பாண்டியன் குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

ஏப்ரல் 14 : அறந்தாங்கி ; 16 : திருப்புகளூர் ; 17 : திருச்சி ; 18 : மங்கைநல்லூர் ; 19 : சீர்காழி ; 20 : கூனிச்சம்பட்டு ; 21 : ஓதியம் பட்டு ; 23 : கரூர் ; 24 : நெய்காரப் பட்டி ; 25 : கோவை ; 26, 27, 28, 29 : அவிஞசி வட்டம் ; 30 : திருச்சி.

தேவராசன் -- நிர்மலா

கலைக்குழு நிகழ்ச்சிகள்

ஏப். 14 : தாழையூத்து ; 15 : தென் திருப்பேரை ; 16 : இராதாபுரம் ; 16 : குரும்பூர் ; 18 : தளபதி சமுத்திரம் ; 19 : கடலையூர் ; 20 : கயத்தார் ; 21 : நாசரேத் ; 22 : கீழப்பாவூர் ; 23 : குறிப்பங்குளம் ; 24 : மயிலப்பபுரம் ; 25 : கண்டபட்டி ; 26 : கடையம் ; 27 : கோவில்பட்டி ; 28 : அருப்புக்கோட்டை ; 29 : எப்போதும் வென்ருன்.

முத்து -- இராசு குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

ஏப்ரல் 15 : திருத்துறைப்பூண்டி ; 21 : நெய்வேலி ; 27 : நாமக்கல் ; 28 : தஞ்சை வட்டம் ; மே 5 : சென்னை.

கலை நிகழ்ச்சி நடத்த விரும்புவோர் தொடர்புகொள்க :—

கே. பி. முத்து, 12, தேனும்பேட்டை இராமசாமி முதலி தெரு, கொண்டியம்பதி, சென்னை-1.

திருக்கழுக்குன்றத்தில் இலக்கிய விழா

திருக்கழுக்குன்றம் முத்தமிழ் மன்றச் சார்பில் 13—4—98 காலை 10 மணிக்கு அடிவார மண்டபத்தில்—கவிஞர் சுரதா தலைமையில் கவியரங்கமும், 11 மணிக்கு திரு. சி. பாலசுப்பிரமணியன் எம்.ஏ., எம்.லிட். தலைமையில் பட்டி மன்றமும், மாலை 6-மணிக்கு பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் சொற்பொழிவும் நடைபெறும் ; ஔவை து. நடராசன் எம்.ஏ.,எம்.லிட். சொற்பொழிவாற்றுவார்.

உணவுத் துறை அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

ஏப். 17 காலை 11-மணி : தஞ்சை கிராம அதிகாரிகள் மாநாடு ; மாலை 6-மணி : வழக்கறிஞர்கள் வரவேற்பு.

ஏப். 18 காலை 9-மணி: அறந்தாங்கி ஊராட்சிமன்றப் பேருந்து நிலைய அடிக்கல் நாட்டு விழா ; ஊராட்சி வரவேற்பு ; 10-மணி : எருக்கலக்கோட்டை பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா ; 11-மணி : மாங்குடி ஊராட்சி வரவேற்பு ; 12-மணி : அரசங்குளம் பள்ளிக் கட்டிடத் திறப்பு —ஊராட்சி வரவேற்பு ; மாலை 4-மணி : அறந்தாங்கி வேளாண்மைக் கிடங்கு திறப்பு—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு ; பிருந்தாணி பள்ளிக் கட்டிடத் திறப்பு ; மாலை 5-30 மணி : பெருங்குளம் பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 6-30 மணி : திருவள்ளுவர் மன்ற ஆண்டு விழா ; 7-30 மணி : அறந்தாங்கிப் பொது வரவேற்பு—பட்டா வழங்கு விழா.

ஏப். 19 காலை 9-மணி : விசயபுரம் ஆசிரியர்கள் விடுதித் திறப்பு விழா—ஊராட்சி வரவேற்பு ; 10-மணி : பெருமகளூர் வேளாண்மைக் கிடங்கு திறப்பு விழா—ஊராட்சி வரவேற்பு ; 11-மணி : வாத்தலைக்காடு பள்ளிக் கட்டிடத் திறப்பு—ஊராட்சி வரவேற்பு ; 11-30 மணி : சேதுபாவா சத்திரம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு ; மாலை 4-மணி : ஒட்டங்காடு தாய்–சேய் நல விடுதித் திறப்பு ; 5-மணி : பேராவூரணி பேரூராட்சி வரவேற்பு ; 6-மணி : வேளாண்மைக் கிடங்குத் திறப்பு—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு ; ஏழை உழவர்கட்குப் 'பட்டா' வழங்குதல் ; இரவு 8-மணி : பொதுக்கூட்டம்.

ஏப். 20 காலை 10-மணி : உளவூர் வேளாண்மைக் கிடங்குத் திறப்பு ; 11-மணி : தலையமங்கலம் பள்ளித் திறப்பு ; பகல் 12-மணி : வெள்ளூர் பள்ளியும், பாலமும் திறப்பு ; மாலை 4-மணி : காடாந்தகுடி பள்ளித் திறப்பு ; 6-மணி : செண்டங்காடு மின்விளக்கு ஏற்று விழா ; 7-மணி : மதுக்கூர் பொதுக்கூட்டம்.

ஏப். 21 காலை 9-மணி : பஞ்சூர் வரவேற்பு ; 10-மணி : திருவோணம் ஊராட்சி வரவேற்பு ; 11-மணி : வடக்கூர் ஊராட்சிப் பள்ளித் திறப்பு ; பகல் 12-மணி : புதூர் ஊராட்சி வரவேற்பு ; மாலை 4-மணி : மருங்குளம் ஊராட்சி வரவேற்பு ; 5-மணி : வல்லம் ஊராட்சி வரவேற்பு—கூட்டுறவுச் சங்கத் திறப்பு ; மாலை 6-மணி : கோமாபுரம் ஊராட்சி வரவேற்பு ; 7-மணி : கந்தர்வக்கோட்டை ஊராட்சி வரவேற்பு—முதலமைச்சர் படத் திறப்பு ; இரவு 8-மணி : பொதுக்கூட்டம்.

தமிழகத்தில் பெரிய அரிசி ஆலைகள்

கூட்டுறவு முறையில் அமையும்

திருச்சி, ஏப். 11—

நாளொன்றுக்கு 1,000 டன் அரிசி அரைக்கும் வகையில் 14 கூட்டுறவு அரிசி ஆலைகளை அடுத்த ஆண்டிலிருந்து அமைக்கத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

இதற்கான நிதியுதவியை உணவுக் கார்ப்பரேஷன் வழங்கும் என்றும் தெரிகிறது.

'பாரத் ஹெவி எலக்ட்ரிகல்' நிறுவனம இருக்கும் கைலாசபுரத்தில் குடும்பக் கார்டு முறையைத் துவக்கிவைத்துப் பேசுகையில், மேற்கண்ட தகவலை தமிழகக் கூட்டுறவு அமைச்சர் திரு. செ. மாதவன் வெளியிட்டார்.

"இந்த அரிசி ஆலைகளை நிறுவும் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ. 1.17 கோடி ஒதுக்கியிருக்கிறது"

என்று அமைச்சர், தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தார்.

பொதுநலத் துறை அமைச்சர்

சாதிக் பாட்சா நைனிடால் பயணம்

குடும்பக் கட்டுப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்கிருர்

சுகாதாரத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, 15—4—68 பிற்பகல் 2-30 மணிக்கு மீனம்பாக்கத்திலிருந்து விமானத்தில் புறப்பட்டு, மாலை 4-20 மணிக்கு பம்பாய் அடைவார் : மாலை 5-10 மணிக்கு அங்கிருந்து விமானத்தில் புறப்பட்டு இரவு 7-மணிக்கு டில்லி அடைவார் ; 16—4—68 காலை 8-மணிக்கு கார் மூலம் புறப்பட்டு மாலை 6-மணிக்கு நைனிடால் போய்ச் சேருவார் ; ஏப். 17 முதல் 19 வரை நைனிடாலில் நடைபெறும் மத்தியக் குடும்பக் கட்டுப்பாட்டுக் குழுவின் ஐந்தாவது கூட்டத்தில் கலந்துகொள்வார்; 20—4—68 காலை 8-மணிக்கு அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு மாலை 6-மணிக்கு டில்லி வந்து சேர்வார்.

அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

ஏப். 13 காலை 9-மணி : சித்தம்பாக்கம் — குழாய் நீர் தொட்டி துவக்கவிழா ; 10 மணி : போந்தவாக்கம் — ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா; 11 மணி : நெல்வாய்—ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழர் ; 11-30 மணி : பூண்டி—கால்நடை மருந்தகம் திறப்பு ; 11-45 மணி : பூண்டி—விவசாயக் கிடங்குத் திறப்பு ; பகல் 12 மணி : திருப்பாச்சூர் — பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 12-30 மணி : நெமிலியகரம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 1 மணி : மஞ்சங்குப்பம்—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; மாலை 4 மணி : திருக்கணஞ்சேரி—துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா ; 4-45 மணி : விளாப்பாக்கம்—துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா ; 5-30 மணி : ஈக்காடுகண்டிகை —துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா ; இரவு 6-15 மணி ; கல்யாணகுப்பம்—உயர் துவக்கப் பள்ளி இணைப்புக் கட்டிடத் திறப்புவிழா ; 7-15 மணி : தண்ணீர்குளம்—துவக்கப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா ; 8 மணி : திருவூர்—குடிநீர் குழாய் திறப்பு விழா.

திருமண அழைப்பு

கழக அமைப்புச் செயலாளர் திரு. **என். வி. நடராசன்** எம். எல் சி. அவர்களின் தமையனர் திரு. என். வி. கதிர்வேலு அவர்களின் மகள் செல்வி: **அறிவழகி**க்கும்—டாக்டர் கே. வடிவேலு அவர்களின் மகன் செல்வன் : **எம். வி. பாலகிருட்டிணனுக்கும்** 14—4—68 காலை 10 மணிக்கு, தங்கசாலைத் தெரு, 293-எண்ணுள்ள 'கீவ்ராஜ்' திருமண மண்டபத்தில் **அறிஞர் அண்ணு** அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள்—சட்டப் பேரவைத்தலைவர், மேயர், துணைமேயர், சட்டமன்ற — மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பரிசளிப்பு விழா

சென்னை–புளியந்தோப்பு நெடுஞ்சாலையிலுள்ள எம். ஜி டிரேடர்ஸ் நிறுவனத்தின் பரிசளிப்பு விழா, 15—4—68 மாலை 6 மணிக்கு திரு. க ஜா மொய்தீன் எம்.பி. தலைமையில் நடைபெறும் ; அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து பரிசுகள் வழங்குவார்.

வருந்துகிறோம்

சென்னை 10-வது வட்ட மாநகராட்சி உறுப்பினர் டி. வெங்கடேசன் அவர்களின் மாமியார் 11—4—68 இரவு இயற்கையெய்தினர் ; சவ அடக்கம் 13—4—68 காலை 8-மணியளவில் மூலக்கொத்தளம் இடுகாட்டில் நடைபெறும்.